**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.301/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW -5 | Taluk | : | |
| Name | : | **சுப்ரமணியன்** | Occupation | : | |
| Father Name | : | **உலகநாதன்** | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 25.04.2025**

**Accused A1, A2 present.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் மணலூரில் குடியிருக்கிறேன். ஹோ ட்டல் வேலை செய்கிறேன். இறந்துபோன பிச்சை தெரியும். அ.சா.1, 2, 3 தெரியும். 1, 2 எதிரிகளை தெரியும். 20.04.2022 ஆம் தேதி மாலை 6.15 மணிக்கு கால்வாய்க்கு வேலைக்கு சென்றுவிட்டு பட்டுகுடி வழியாக வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது 2வது எதிரி அவருடைய வீட்டிற்கு முன்பாக குச்சிகாரி மகன் பிச்சை காலி பண்ணிட்டுதான் வரவேண்டும் என்று 1வது எதிரியை பார்த்து கூறினார். நான் கொஞ்ச தூரம் சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தில் சாவி வைத்துவிட்டு சென்றதால் எடுக்க வந்தபோது 2வது எதிரியின் வீட்டில் வேகமாக சத்தம் கேட்டது. நான் இறங்கி சென்று பார்த்தபோது பட்டுகுடி சந்திரசேகரன் கால்வாயில் பிச்சை வலதுகையில் வெட்டுபட்டு கிடந்தார். சந்திரசேகரன் ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார் வர கால தாமதமானதால் கார் வரச்சொல்லி என்னை போன் செய்யசொன்னார், நான் விஜய் என்ற நண்பனுக்கு போன் செய்து கார் எடுத்து வருமாறு சொன்னேன், அந்த காரில் நானும், என் நண்பன் விஜய்யும், சந்திரசேகரனும் கால்வாயில் வேலை செய்த இரண்டுபேர்கள் எல்லாம் சேர்ந்து காரில் பிச்சை அய்யம்பேட்டை அரசு மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்தோம். சிகிச்சையில் இருந்த கொஞ்ச நேரத்தில் பிச்சை இறந்துவிட்டதாக மருத்துவமனையில் சொன்னார்கள். பிச்சை 1வது எதிரி வெட்டிவிட்டதாக பிச்சையின் மகன் சந்திரசேகரன் சொன்னார். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் மணலூர். பட்டுகுடியில் எந்த தெருவில் 2வது எதிரியின் வீடு உள்ளது என்றால் பண்ணையாத்து பாலத்திற்கும் வலது பக்கம் உள்ளது. 2வது எதிரி சத்தம் போடும்போது சந்திரசேகரன் இருந்தார். சந்திரசேகரன் தான் இறந்தபிச்சையின் மகன் என்றால் சரிதான். 2வது எதிரி பிச்சையை திட்டும்போது நான், சந்திரசேகரன் மற்றும் என் அண்ணன் பிரபும் இருந்தார். பிரபு இறந்த பிச்சையின் மருமகன் என்றால் சரிதான். போலிஸாரிடம் பிரபு தன் அண்ணன் என்றும், அவர் இறந்தவரின் மருமகன் என்றும் கூறவில்லை. 2வது எதிரி குச்சிகாரி மகன் பிச்சை காலி பண்ணிட்டுதான் வரவேண்டும் என்று 1வது எதிரியை பார்த்து கூறும்போது நானும், பிரபு, இறந்தபிச்சையின் மகன் சந்திரசேகர் ஆகியோர் இருந்தோம். ஆனால் நான் திட்டுகீறீர்கள் என்று 2வது எதிரியை பார்த்து நாங்கள் கேட்கவில்லை. அதன்பிறகு நானும், பிரபுவும் கணபதி அக்ரஹாரத்திற்கு வந்தோம். கணபதி அக்ரஹாரம் பட்டுகுடியிலிருந்து 3கி.மீட்டருக்கு அப்பால் உள்ளது. கணபதி அக்ரஹாரம் சென்றுவிட்டு இரவு 7மணிக்கு பட்டுகுடிக்கு வந்தேன். நான் போலிஸ் விசாரணையில் நான் கொஞ்ச தூரம் சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தில் சாவி வைத்துவிட்டு சென்றதால் எடுக்க வந்தபோது 2வது எதிரியின் வீட்டில் வேகமாக சத்தம் கேட்டது என்றும், நான் இறங்கி சென்று பார்த்தபோது பட்டுகுடி சந்திரசேகரன் கால்வாயில் பிச்சை வலதுகையில் வெட்டுபட்டு கிடந்தார் என்றும், சந்திரசேகரன் ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார் வர கால தாமதமானதால் கார் வரச்சொல்லி என்னை போன் செய்யசொன்னார் என்றும், நான் விஜய் என்ற நண்பனுக்கு போன் செய்து கார் எடுத்து வருமாறு சொன்னேன் என்றும், அந்த காரில் நானும், என் நண்பன் விஜய்யும், சந்திரசேகரனும் கால்வாயில் வேலை செய்த இரண்டுபேர்கள் எல்லாம் சேர்ந்து காரில் பிச்சை அய்யம்பேட்டை அரசு மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்தோம் என்றும், சிகிச்சையில் இருந்த கொஞ்ச நேரத்தில் பிச்சை இறந்துவிட்டதாக மருத்துவமனையில் சொன்னார்கள் என்றும், பிச்சை 1வது எதிரி வெட்டிவிட்டதாக பிச்சையின் மகன் சந்திரசேகரன் சொன்னார் என்றும் கூறவில்லை என்றால் சரியல்ல. மணலுருக்கும் பட்டுகுடிக்கும் இடையே 6 கி.மீட்டர் இருக்கும். இறந்த பிச்சை எனக்கு உறவினர் என்பதால் நடக்காத சம்பவத்தை நடந்ததாக முதல்விசாரணையில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலிஸார் காவல்நிலையத்தில் இரவு 8மணிக்கு விசாரித்தார்கள்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- G. சுந்தரராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.